**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(12.03.2025 முதல் 16.03.2025)**

**அறிக்கை எண் 100/2024** **தேதி. 11.03.2025**

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

நாகப்பட்டினம் மாவட்டத்தின் 07.03.2025 முதல் 10.03.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 32 - 33 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 22 - 23 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 0 - 11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வடக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை நாகப்பட்டினம் (12.03.2025 முதல் 16.03.2025)

| கடந்த வார வானிலை (07.03.2025 முதல் 10.03.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 16.03.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 07/03 | நாள்-2 08/03 | நாள்-3 09/03 | நாள்-4 10/03 | தேதி | நாள்-1 12/03 | நாள்-2 13/03 | நாள்-3 14/03 | நாள்-4 15/03 | நாள்-5 16/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 52 | 18 | 0 | 0 | 4 |
| 33 | 32 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 23 | 23 | 22 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 25 | 25 |
| 2 | 2 | 1 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| 93 | 92 | 87 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 92 | 92 |
| 74 | 64 | 72 | 74 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 72 | 72 | 72 | 74 | 74 |
| 3 | 3 | 0 | 11 | காற்றின் வேகம் (கி.மீ /மணி) | 10 | 10 | 6 | 6 | 10 |
| வடக்கு | கிழக்கு தென் கிழக்கு | வடக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | கிழக்கு தென் கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு |

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 12.03.2025, 13.03.2025 மற்றும் 16.03.2025 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 92 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6 - 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| **பொது** | வரும் நாட்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |

| | | |
|---|---|---|
| | | பன்னை கருவிகள், இயந்திரங்கள், மின் கலன்கள் போன்றவற்றை தண்ணீர் தேங்காத இடங்களில் பாதுகாப்பாக வைக்கவும். |
| **நெல்** | | அறுவடை செய்த நெல் விதைகளை மழைக்கு முன் நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |
| **பயறு வகைகள்** | | வரும் நாட்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் உளுந்து வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகள்** | **மாடு மற்றும் ஆடு** | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**

•